


# EXPRESS EV VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*




VOL - 4 ISSUE - 42 Editorial : 044-42077328 / 7305837388

## Residents Want The Vijayanagar Bus Terminus To Be Shifted ...



As the area around Vijayanagar bus terminus continues to remain congested despite the inauguration of a double-layered flyover, the residents want the terminus to be shifted to a site near the Velachery MRTS railway station.

Parking of several buses at the terminus near the narrow junction creates traffic bottleneck during morning and evening peak hours, say local activists. Shifting the terminus to a site adjacent to the MRTS railway station will not only end this problem but also make it a multimodal transport hub similar to the one at the Tambaram railway station.

The junction of Velachery Main Road-Bypass is traditionally prone to heavy congestion. To decongest the junction, the State Highways Department built a double-layered flyover with one linking Velachery Main Road with Bypass and the other linking Taramani Main Road with Bypass. However, the local residents point out that the junction below the flyover continues to see traffic congestion during morning and evening peak hours.

Social activist S. Kumararaja blamed the parking of buses for this. The residents have been demanding shifting of the bus terminus to a spot adjacent to the MRTS railway station where huge parcel of land belonging to the Chennai Metropolitan Development Authority (CMDA) was available. "This would ease the traffic congestion and thousands of commuters using the MRTS would benefit in accessing public transport," he says.

At present, the commuters travelling by MRTS trains and wanting to proceed to Guindy, Saidapet and T. Nagar have only a few buses as most of the buses bound for Guindy, Ashok Nagar and Ambattur are operated from the Vijayanagar bus terminus, which is 1.50 km away.

A senior official of the Metropolitan Transport Corporation (MTC) said they would shift the Vijayanagar bus terminus if the State government allocates land near the Velachery railway station.




## உலக யோகா தினத்தை முன்னிட்டு வேளச்சேரி மனவலக்கலையின் சார்பாக நடைபெற்ற யோகா பயிற்சி ...




21/06/2023 அன்று உலக யோகா தினத்தை முன்னிட்டு வேளச்சேரி மனவலக்கலையின் சார்பாக டான்சிநகரில் உள்ள தயா ஜோதி இன்டர்நேசல் பள்ளி மாணவர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் திருமதி. கவிதா Principal தாயா ஜோதி பள்ளி, சிறப்பு விருந்தினர் திரு.பாலகிருஷ்ணன் பொதுசெயலாளர் டான்சிநகர் நலவாழ்வு சங்கம், மணவாளை மன்றத்தைச் சேர்ந்த குருகள் நாச்சியப்பன் ,தன்சேகரி, மல்லிகா, கல்பனா, சிவகாமி, ராதா, இராதாகிருஷ்ணன், வசந்ததேவி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற உள்ள ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி விழா...

நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் 28/06/2023 அன்று நடைபெற உள்ள ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி விழா நிகழ்ச்சி

காலை 9.30 மணிக்கு ஸுதர்சன ஹோமம்

காலை 10.30 மணிக்கு ஸ்ரீ சக்ரத்தாழ்வார் திருமஞ்ஜனம்

மாலை 6.00 மணிக்கு ஸ்ரீ ஸுதர்சன ஸஹஸ்ரநாமார்ச்சனைன

நடைபெறும்.

## மெட்ரோ ரெயிலுக்காக அடையாறு ஆற்றில் தண்ணீருக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி விரைவில் தொடங்குகிறது...



கிரீன்வேஸ் சாலையில் சுரங்கம் தோண்டும் பணிக்காக 4 சுரங்கம் தோண்டும் எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. அடையாறு ஆற்றின் நீருக்கு அடியில் களிமண் மற்றும் மணலின் கலவை இருப்பதாக சோதனை மூலம் தெரிய வந்துள்ளது.

# CLASSIFIED

## VELACHERY
**Laxmipuram before Dandeeswaram Colony**

INDP HOUSE 3BHK, 1 Ground, 1600 Built, CCP, 3P Power, Metro, Bore Water, Safe Area during Flooding, Cyclone, EAST Facing, Rs.3.3Cr

**89399 43999**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE

Contact
9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

## RESALE
**VELACHERY SRINIVASA NAGAR**
**Near ISHA Homes, 10mts to MRTS**

2BHK - 710 Sqft / UDS - 355 Sqft / GF / EAST Facing / Rs. 46Lacs

**90030 93204**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

## Mother Land
*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

*Contact*
**72992 62185**
**90947 52300**

---

## WANTED
*Tele Callers*

CONTACT
**7305837388**

---

**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery*
*( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT
8015427018

---

## WANTED
Front Desk Executive
*(Male / Female)*

Ateliers Fitness
Velachery, Behind A2b

*Contact*
**9841030772**

---

## WOMAN'S WELLNESS YOGA CENTRE
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**

## NFC
**NIMS FOOD CONSULTANT**

**E. KAMESH KUMAR** IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

**Mobile:9790 902400**

email:Consultantnfc@gmail.com

---

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | ₹ விலை 1 லிட்டர் |
| 102.63 | 94.24 |

---

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

**Online Class for Women and Kids**

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT*
**89391 53560**

---

## DESIGNING
Tamil & English DTP designing works
Rs. 500/- only

*Contact*
**7358182075**

---

## WANTED
**LADIES TAILOR**

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*
**4435504719**
**8870393999**

---

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5445 | 1 கிராம் | 5906 |
| | 8 கிராம் | 43560 | 8 கிராம் | 47248 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 74.00 | | |
| | 1 கிலோ | 74000 | | |

Friday Price

---

**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*
**909 494 7285**

---

## Butter Flies
**Beauty Parlour & Beauty Training Institute**
Recognised by Tamilnadu Governmen

**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

## SHARAN TRAVELS
All kinds of Tourist vehicle available here
Drivers Available

Contact V. Marimuthu
**9840508030**

---

## RENTAL
LAND BUYING, SELLING

**All Kind of Building Repair Works Undertaken**

Contact B. Rajendran
**90809 94500**

---

## SERVICES
**Plumbing works**

**Contact**
**Govindaswamy**

87544 09752

ஆன்மீக தகவல்

# நிலை வாசலில் இந்த தண்ணீரை தெளித்தால், மகாலட்சுமியின் வருகை எப்போதும் நம் வீட்டிற்குள் இருக்கும்...

மகாலட்சுமியின் கடைக்கண் பார்வையானது நம் வீட்டின் மேல் விழாதா, நம்முடைய பணகஷ்டம் தீராதா, நம் வீட்டில் ஐஸ்வர்யா கடாட்சம் நிலையாக தங்காதா என்று ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். மகாலட்சுமி ஒரு சில இடங்களில் விரும்பி தங்கி விடுகின்றாள். ஒரு சில இடங்களில் வருவதும் போவதுமாக இருப்பாள். ஒரு சில இடங்களில் மகாலட்சுமியின் வாசமே இருக்காது. புரிகிறதா உங்களுக்கு? சில பேர் நிரந்தரமாக பரம்பரை பரம்பரையாக பணக்காரர்களாகவே இருக்கிறார்கள். ஒரு சில பேர், பணம் இல்லாமல் சில நாள் கஷ்டப்படுவார்கள். சில நாள், கையில் பணம் இருக்கும் சந்தோஷமாக இருப்பார்கள். ஒரு சில பேர் காலம் முழுவதும் கஷ்டப்பட்டே வேண்டிய சூழ்நிலை. எதற்காக இந்த பாரபட்சம். எதனால் இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மாதிரியான விதி விதிக்கப்பட்டிருக்கிறது.

காரணம் இல்லாமல் எந்த ஒரு காரியமும் நடக்காது. மகாலட்சுமி ஒரு இடத்தில் வாசம் செய்யவில்லை என்றால் அந்த இடத்தில் ஏதோ ஒன்று சரியில்லை என்று தான் அர்த்தம். உங்களுடைய வீட்டில் எது சரியில்லை என்பதை கூர்ந்து கவனியுங்கள். அதை சரி செய்து விட்டால் மகாலட்சுமி தானாக உங்கள் வீட்டிற்கு வரப் போகின்றாள் அவ்வளவுதான்.

முகாலட்சுமி வீட்டிற்குள் நுழைய செய்ய வேண்டிய பரிகாரம்:

மகாலட்சுமிக்கு பிடிக்காத ஒரு விஷயம் சோம்பேறித்தனம். இந்த சோம்பேறித்தனத்தை தான் மூத்த தேவி, மூதேவியாக நம்முடைய முன்னோர்கள் சொல்லி வைத்து உள்ளார்கள். இந்த மூத்ததேவி இருக்கக்கூடிய வீட்டில் மகாலட்சுமி தாய் காலடி எடுத்து வைக்க மாட்டாள்.

வீட்டில் இருக்கும் அந்த மூத்த தேவியை எப்படி வீட்டில் இருந்து விரட்டி அடிப்பது. வீட்டில் இருப்பவர்கள் எல்லாம் சுறுசுறுப்பாக தங்களுடைய வேலையை செய்து கொண்டே இருந்தால் வீட்டில் மூத்த தேவி தங்க மாட்டாள். வீட்டை தினம் தினம் சுத்தம் செய்து நறுமணத்தோடு வைத்துக் கொண்டிருந்தால் வீட்டில் மூத்ததேவி தங்க மாட்டாள்.

இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு ஒரு சின்ன சொம்பில் குடிக்கின்ற நல்ல தண்ணீரை ஊற்றி அதில் மஞ்சள் சிறிதளவு போட்டு, கிராம்பு இரண்டு நசுக்கி அதில் போட்டு, கலந்து வைத்து விடுங்கள். மறுநாள் காலை இந்த தண்ணீரில் அந்த கிராம்பு வாசமும் மஞ்சள் தூள் வாசமும் நிறைந்து இருக்கும். மறுநாள் காலை வாசல் தெளிக்கும் தண்ணீரில் இந்த வாசம் நிறைந்த தண்ணீரை நிலை வாசலில் தெளிக்க வேண்டும். பிறகு கோலம் போட வேண்டும். நிலை வாசலில் இருக்கக்கூடிய இந்த கிராம்பு வாசத்திற்கும் மஞ்சள் வாசத்திற்கும் உங்களுடைய வீட்டிற்குள் நேர்மறை ஆற்றல் அதாவது லட்சுமி கடாட்சம் தினம் தினம் நுழையும்.

தினமும் இந்த தண்ணீரை வீட்டு வாசலில் தெளித்து விட வீட்டிற்குள் மூத்ததேவியும் நுழைய மாட்டாள். இது தவிர வாரம் தோறும் வெள்ளிக்கிழமை அன்று மகாலட்சுமி வீட்டிற்குள் வருகை தர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு ஒரு வெற்றிலையில், 2 ஏலக்காய், 2 லவங்கம், ஒரு சிட்டிகை மஞ்சள் பொடியை வைத்து மடித்து நூலால் கட்டி மகாலட்சுமி பாதங்களில் வைத்து வேண்டிக் கொள்ளுங்கள். மகாலட்சுமியே விரும்பி வீட்டிற்குள் அழையுங்கள். இப்போது இந்த பொட்டலத்தை கொண்டு போய் அப்படியே பணம் வைக்கும் பீரோவில் வெள்ளிக்கிழமை அன்றே வைத்து விடுங்கள்.

மகாலட்சுமி விரும்பி வந்து இந்த வெற்றிலை பொட்டலத்திற்குள் அமர்ந்து கொள்வாள். வாரம் ஒரு முறை இந்த பழைய பொட்டலத்தை மாற்றினால் போதும். புதியதாக மீண்டும் எல்லா பொருட்களையும் வைத்து வெற்றிலை பொட்டலத்தை தயார் செய்து பண பட்டியல் வைத்து வரவேண்டும்.

மேல் சொன்ன இந்த இரண்டு விஷயங்களை பின்பற்றி வந்தாலே வீட்டில் மகாலட்சுமி கடாட்சம் நிலையாக இருக்கும். மகாலட்சுமியின் கடைக்கண் பார்வை நம்மேல் விழும். இது எல்லாவற்றையும் விட இன்னொரு முக்கியமான விஷயம் நீங்கள் சோம்பேறித்தனத்தோடு இருக்கக் கூடாது. சுறுசுறுப்போடு எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். பணம் சம்பாதிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம். முயற்சியோடு சேர்ந்த ஆன்மீகம் பரிகாரம் உங்களுக்கு பல மடங்கு வெற்றியை தரும் என்ற கருத்துடன் இன்றைய பதிவினை நிறைவு செய்து கொள்வோம்.



# அழகுக் குறிப்பு

## அழகு சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு தரும் கொட்டாங்குச்சி

அழகு சம்பந்தப்பட்ட விஷயத்தை பேசினாலே ஏகப்பட்ட பிரச்சனைகள். முகத்தில் சில பேருக்கு கரும்புள்ளிகள், முகப்பரு, கருந்திட்டுக்கள் உள்ளது. சில பேருக்கு சின்ன வயசிலேயே முகத்தில் நிறைய சுருக்கம் வருகிறது. சில பேருக்கு கொப்பளங்கள் வருகிறது. இப்படி அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

பிரச்சினைகள் பலவிதம். ஆனால் இந்த எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரே ஒரு தீர்வு உள்ளது. அதுவும் இயற்கையான முறையில். இயற்கையாக நமக்கும் கிடைக்கும் ஒரு பொருளை வைத்து, இன்றைக்கு ஒரு சூப்பர் ரெமடியை பார்க்க போகின்றோம்.

இன்றைக்கு இந்த ரெமடியை முயற்சி செய்தால், நாளைக்கு பலனை எதிர்பார்க்க முடியாது. 48 நாட்கள் விடாமல் இதை தொடர்ந்து பின்பற்றி வரும்போது, நிச்சயமாக ஒரு நல்ல பலன் தெரியும். ஏனென்றால் இது இயற்கை வைத்தியம் அல்லவா. சரி, அழகு குறிப்புகள் செல்வோம். இந்த குறிப்புக்கு நாம் பயன்படுத்த போக்கும் பொருள் கொட்டாங்குச்சி.

கொட்டாங்குச்சிக்கு மேலே இருக்கக்கூடிய அந்த நாரையெல்லாம் சுத்தமாக நீக்கிவிடுங்கள். ஒரு கத்தியை வைத்து தேய்த்து விட்டாலும் சரிதான். கொட்டாங்குச்சிகளை நான்கு ஐந்து துண்டுகளாக உடைத்துக் கொள்ளுங்கள். ஒரு பெரிய சொம்பு அளவு தண்ணீர், 1 லிட்டர் தண்ணீர் என்று வைத்துக் கொள்வோம். அதை பாத்திரத்தில் ஊற்றி உடைத்த இந்த நான்கு ஐந்து துண்டு கொட்டாங்குச்சிகளை அதில் போட்டு கொதிக்க வைக்க வேண்டும்.

தண்ணீர் கொதிக்கத் தொடங்கும். கொட்டாங்குச்சியில் இருக்கக்கூடிய சாறு அனைத்தும் அந்த தண்ணீரில் இறங்க வேண்டும். தண்ணீரில் லேசாக சிவப்பு நிறமாக மாறி வரும்போது அடுப்பை அணைக்க வேண்டும். அதிகபட்சம் ஒரு மணி நேரம் தண்ணீர் கொதிக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு வடிகட்டிய தண்ணீரை நன்றாக ஆற வைத்து பாட்டிலில் ஊற்றிக் கொள்ளவும். /ப்ரிட்ஜில் வைக்கவும். 10 நாட்கள் வரை இந்த தண்ணீரை பயன்படுத்தலாம். இதை முகம் முழுவதும் தினமும் ஸ்ப்ரே செய்யலாம். இரவு தூங்க செல்வதற்கு முன்பு கூட முகத்தில் ஸ்பிரே செய்துவிட்டு, அது காய்ந்தவுடன் தூங்க செல்லலாம்.

உங்களுடைய முகத்தில் தழும்புகள் முகப்பருக்கள் அதிகமாக எந்த இடத்தில் இருக்கிறதோ அந்த இடத்தில் கொஞ்சம் கவனம் எடுத்து ஒரு பஞ்சில் இந்த தண்ணீரை தொட்டு வையுங்கள். சில நிமிடங்கள் அந்த பஞ்சையும் அந்த முகப்பருக்கு மேல் வைத்து அந்த தண்ணீரை சருமம் உறிஞ்சும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.


48 நாள் தினமும் இதை தொடர்ந்து செய்து வந்தால் எந்த பக்க விளைவுகளும் ஏற்படாது. படிப்படியாக உங்கள் சரும பிரச்சனை குறையும். வயதான தோற்றத்தை தள்ளிப் போடக்கூடிய சக்தி இதற்கு உண்டு. உங்களுக்கு சருமத்தில் சுருக்கமே வந்திருந்தாலும், அந்த சுருக்கத்தை படிப்படியாக குறைக்கும். 48 நாட்களுக்குப் பிறகு தொடர்ந்து பயன்படுத்தலாமா. தாராளமாக பயன்படுத்தலாம். இந்த கொட்டாங்குச்சி தண்ணிக்கு பயங்கர பவர். நீங்க என்றைக்குமே இளமையாக அழகான சருமத்தோடு இருக்க வேண்டும் என்றால் இந்த அழகு குறிப்பு உங்களுக்காக. நீங்களும் தேவதை போல மாற விருப்பமானால் இந்த குறிப்பை முயற்சி செய்து பலன் பெறலாம்.


# நான்கு நண்பர்கள்

பழமொழி கதை

ஒரு அடர்ந்த காட்டு பகுதியில நான்கு நண்பர்கள் வாழ்ந்துகிட்டு வந்தாங்க. ஒரு காக்கா ,ஒரு எலி ,ஒரு மான் ,ஒரு ஆமை இப்படி நாலு பேரும் நண்பர்களா இருந்தாங்க

அவங்க எப்பவும் காட்டு பகுதியில சுதந்திரமா பேசி பொழுத கழிச்சிகிட்டு இருப்பாங்க





ஒருநாள் அந்த பகுதிக்கு ஒரு வேட்டை காரன் வர்றத பாத்துச்சு மான்


உடனே தன்னோட நண்பர்கள் கிட்ட உடனே எல்லாரும் ஒளிஞ்சிக்க சொல்லி சொல்லுச்சு





பதறிப்போன ஆமை நண்பர்களே என்னால உங்கள போல வேகமா ஓட முடியாதுனு சொல்லி வருத்தப்பட்டுச்சு

அப்ப அந்த எலி சொல்லுச்சு ,நண்பரே பதறவோ பயப்படவோ வேணாம் ,பதறாத காரியம் சிதறாது அதனால பொறுமையா இருக்க சொல்லிட்டு ஒரு ஓட்டைகுள்ள போய் ஒளிஞ்சிகிட்டு நடக்கிறத பார்த்துச்சு





அதே நேரத்துல அந்த காக்கா உயரமான இடத்துக்கு போய் உக்காந்து என்ன நடக்குதுன்னு பாத்துச்சு ,மான் பக்கத்துல இருக்குற ஒரு புதர்ல ஒளிஞ்சிகிடுச்சு






அங்க வந்த வேட்டைக்காரன் அந்த ஆமைய எடுத்து ஒரு பைக்குள்ள போட்டு நடக்க ஆரம்பிச்சான்

இது பார்த்த மத்த மூணு நண்பர்களும் ஒரு திட்டம் போட்டாங்க ,அதுபடி காக்கா உயர பறந்து அந்த வேட்டைக்காரன் போகுற பாதைய சொல்லுச்சு

உடனே மான் அந்த வேட்டைக்காரன் போகுற வழிக்கு வேற பாதை வழியா வந்து செத்து கிடக்குற மாதிரி படுத்துச்சு


அத பார்த்த அந்த வேட்டைகாரன் அந்த பைய அங்கேயே போட்டுட்டு அந்த மானை தூக்க போனான்





அப்ப அங்க வந்த எலி அந்த பைய ஓட்ட போட்டு ஆமைய தப்பிக்க வச்சுச்சு

இது பார்த்த காக்கா மானுக்கு தப்பிக்க சொல்லி கத்துச்சு ,உடனே மானும் வேகமா ஓடி போயி தப்பிச்சிடுச்சு





அந்த வேட்டைக்காரன் ஏமாந்து போனான் ,அப்புறமா அந்த நான்கு நண்பர்களும் தங்களுக்குள்ள பேசிக்கிட்டாங்க ,*__பதறாத காரியம் சிதறாது__*னு நம்ம பெரியவங்க சொன்னது எவ்வளவு உண்மையா போச்சுன்னு பேசிக்கிட்டாங்க

## சர்க்கரை கொல்லி பயன்கள்



வாரம் இருமுறை குறிஞ்சாக் கீரையை உணவில் சேர்த்து உண்டு வந்தால் உடல் சூடு தணியும்.

உடல் மேல் வரும் தடிப்பு, பத்து, படை, இவைகளுக்கு இதன் இலையை அரைத்து பூசி வர அவை மறைந்துவிடும்.

எத்தகைய விஷக்கடியாக இருந்தாலும் குறிஞ்சாக் கீரையை கடிபட்ட இடத்தில் வைத்து கட்டியும், கீரையை கஷாயம் செய்து சாப்பிட்டால் விஷம் விரைவில் முறியும்.

சிறுகுறிஞ்சான் இலையை நிழலில் காயவைத்து இடித்து தூள் செய்து சர்க்கரை வியாதி உள்ளவர்கள் நெய்யில் குழைத்து சாப்பிட்டால் சிறுநீரில் சர்க்கரையின் அளவு குறைந்து நாளடைவில் நோய் முற்றிலும் குணமடைந்து விடும்.

குறிஞ்சாக் கீரையை நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் காலையில் கஷாயம் செய்து சாப்பிட்டு வந்தால் உடலில் நோயின் தாக்குதல் இருக்காது.

இக்கீரையை ஆமணக்கு எண்ணெய் விட்டு வதக்கி நெறிகட்டிய இடத்தில் வைத்து கட்டினால் வலி குறையும்.

## அரசு கலைக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடங்கும் தேதி மாற்றம்...



தமிழ்நாட்டில் 163 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இருக்கும் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 299 இடங்கள் உள்ளன. இந்த இடங்களில் மாணவர் சேர்க்கை ஆன்லைன் கலந்தாய்வு மூலம் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 1-ந்தேதி முதல் 10-ந்தேதி வரையில் முதற்கட்டமாகவும், கடந்த 12-ந்தேதி முதல் 20-ந்தேதி வரை 2-ம் கட்டமாகவும் கலந்தாய்வு நடத்தி முடிக்கப்பட்டது. இந்த 2 கட்ட கலந்தாய்வு முடிவில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 299 இடங்களில், 75 ஆயிரத்து 811 இடங்கள் நிரப்பப்பட்டதாக கல்லூரிக் கல்வி இயக்ககம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து மீதமுள்ள இடங்களும் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டன. இந்த நிலையில் ஏற்கனவே வெளியிட்டு இருந்த கலந்தாய்வு குறித்த அட்டவணையில் அரசு கலைக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு வகுப்பு மாணவ-மாணவிகளுக்கு 22-ந்தேதி (அன்று) முதல் வகுப்புகள் தொடங்கி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் நேற்று உயர்கல்வித் துறை அந்த தேதியை மாற்றம் செய்து, புதிய தேதியை அறிவித்துள்ளது. இதுதொடர்பாக உயர்கல்வித் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:- அரசு கலைக் கல்லூரிகளில் காலியாக உள்ள ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 299 இடங்களில், 75 ஆயிரத்து 811 இடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. மீதமுள்ள இடங்களுக்கு இன சுழற்சி முறையில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் வருகிற 30-ந்தேதி வரை இந்த மாணவர் சேர்க்கை நடைபெறும். அதனைத் தொடர்ந்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் அடுத்த மாதம் (ஜூலை) 3-ந்தேதி முதல் தொடங்கி நடைபெறும்.

# வரலாறு படைத்த பவானி தேவி ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப்பில் பதக்கம் உறுதி...



ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாடு வீராங்கனை பவானி தேவி வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்தார்.

சீனாவில் ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப்போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் ஜப்பான் வீராங்கனை மிசாக்கி எமுராவை வீழ்த்தி பவானி தேவி அரையிறுதிக்கு முன்னேறினார். இதன் மூலம் இந்தியாவிற்கு வெண்கலம் உறுதியாகியுள்ளது.

இதன் மூலம் பவானி தேவி ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப்போட்டியில் பதக்கம் வெல்லும் முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றுள்ளார்.

பவானி தேவி காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கம் வென்றிருக்கிறார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று இந்தியா சார்பில் விளையாடி இருந்தார். மகளிருக்கான தனிநபர் சேபர் பிரிவு அரையிறுதிக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. உலகின் முதல் நிலை வீராங்கனையான மிசாகி எமுராவை எதிர்கொண்டார். விறுவிறுப்பான போட்டியில் 15-10 என்ற செட் கணக்கில் பவானி தேவி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இதற்கு முன் மிசாகிக்கு எதிரான மூன்று போட்டிகளிலும் பவானி தோல்வியை தழுவி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




[13] **திருக்குறள்**



விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

Let clouds their visits stay, and dearth
Distresses all the sea-girt earth.

## ALTERNATIVES

***Very tasty - delectable***
***Very big - massive***
***Very exciting - exhilarating***
***Very dirty - filthy***
***Very sure - certain***



Dr.Mrs. Y. Deepika, M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,
India.

## *BOOK REVIEW OF THE WEEK*

Hey guys, today we'll be reviewing *Harry Potter and The Half Blood Prince*.

Now, the Harry Potter series is awesome. Though it did have one bad book, the other six are very good. The only bad book in the series is The Order of the Phoenix. It's just a huge filler book to kill off some major characters like Matpat said. The Half Blood Prince focuses on Draco and Snape. The two of many characters portrayed in a negative light in the series. As Draco's dad is in Azkaban, Snape forces Draco to become a Death Eater. All of this results in Harry finding the book of The Half Blood Prince and using it himself. He finally figures out that Snape is The Half Blood Prince. At the end of the book, Dumbledore just straight up dies.

Positives:

This is when the series took a darker turn. The first five books were not too mature. Kids could still read them. But this book was very dark compared to the others. The pacing is one of the best in the series. It starts off slow but picks up by the 3rd chapter. This book begins with the muggle prime minister worrying about the death eaters that destroyed the bridge and wreaked havoc in Diagon Alley. The book is also not too long, especially compared to the previous book which was 899 pages long. This one is only 607 pages long.

Negatives:

This book is almost perfect. It is very hard to complain about it. The only thing that is not that good was that we could have gotten more of Voldemort talking with Draco and manipulating him to become a Death Eater. And that's about it.

Overall review:

The magnum opus of J.K Rowling is a near perfect masterpiece. Even though my favourite one is the third.



*Yeddanapudi Jeyan*
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.

ANANDAM LEARNING ACADEMY
P.R.
www.amgp.in
CLASSES for 2nd to 12th by experienced Teachers
PHYSICS
CHEMISTRY
MATHEMATICS
BIOLOGY
SOCIAL STUDIES
SPELLING BEE
SPOKEN ENGLISH
SPOKEN HINDI
TAMIL / BASIC TAMIL
KEYBOARD
Contact: 99520 62573 / 96778 07469
ADDRESS
37F, VELACHERY - TAMBARAM ROAD
VIJAYANAGAR, VELACHERY - 42
(NEAR ADYAR ANANDA BHAVAN)

arcus
creating careers



Course
- Java training
- AWS training
- Software testing training
- Mainframe training

Value added services
- Interview preparation
- Project seminar
- Resume preparation
- Mock interviews
- Soft skill seminar

No.37, Diya Complex, Tambaram Main Road,
Next to A2B Restaurant Vijayanar Nagar bus stand, Velacherry, Chennai - 600042
93827 29797
Chennai@arcusinfotech.com
https://arcusinfotech.com


# இந்த வார ராசிபலன்



**மேஷம்**
இந்த வாரம் நிதி நிலையில் முன்னேற்றம் இருக்கும், ஆனால் குடும்பத்தில் உள்ள ஒருவரின் உடல்நலக்குறைவு மருத்துவ கவனிப்பு தேவைப்படலாம்.



**துலாம்**
இந்த வாரம், குடும்பத்தின் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் தங்களுக்காக உங்களிடமிருந்து அதிக நேரம் கோரலாம்.



**ரிஷபம்**
இந்த வாரம் உங்கள் பணத்தைச் சேமிக்க வேண்டிய அவசியம் இருக்கும், இந்த வாரம் சில கடனாளிகள் உங்களிடம் பணம் கேட்கலாம்.



**விருச்சிகம்**
இந்த வாரம் உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்-குள், குடும்ப உறுப்பினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வீட்டின் அமைதியைக் கெடுக்கும்.



**மிதுனம்**
உங்கள் அதிர்ஷ்டத்தை சரியான முறையில் பயன்படுத்தி, இந்த வாரம் உங்கள் பணத்தை சேமிப்பதில் உங்கள் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.



**தனுசு**
இந்த வாரம் உங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி திரும்பும். அதற்கு முன் உங்கள் குடும்பத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இருக்கும்.



**கடகம்**
இந்த வாரம் நீங்கள் எந்த முக்கிய முடிவையும் எடுக்க வேண்டியிருந்தால், உங்கள் குடும்பத்தினரின் கருத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.



**மகரம்**
உங்கள் மனம் எந்த வேலையிலும் குறைவாக இருக்கும், பணியிடத்திலிருந்து முன்கூட்டியே விடுப்பு எடுத்து வீட்டிற்குச் செல்ல நீங்கள் ஆர்வமாக இருக்கலாம்.



**சிம்மம்**
இந்த வாரம் உங்கள் வீட்டுப் பிள்ளைகளுடன் ஏற்பட்ட சண்டையை நீக்க முடியும். நீங்கள் அவர்களை வெளியூர் பயணத்திற்கு செல்ல திட்டமிட்டுள்ளீர்கள்.



**கும்பம்**
இந்த வாரம் முழுவதும் தேவையற்ற செலவுகள் உங்கள் நிதி நிலையை மிகவும் மோசமாக்கும். உங்கள் பணத்தை முடிந்தவரை குறைவாக செலவிடுங்கள்.



**கன்னி**
இந்த வாரம் உங்கள் மனநிலை சோகமாக இருக்கலாம். நீங்கள் எடுக்கும் தவறான நடவடிக்கை குடும்பச் சூழலை மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.



**மீனம்**
இந்த வாரம் உங்கள் ராசிக்காரர்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். இந்த நேரத்தில் நட்சத்திரங்கள் உங்களுக்கு முற்றிலும் சாதகமாக உள்ளன.

# YOGASANAM

## சுப்த கோணாசனம்

**பலன்கள்:-**

முதுகுத்தண்டை நீட்சியடையச் செய்வதுடன் பலப்படுத்தவும் செய்கிறது
முதுகுத் தசைகளைப் பலப்படுத்துகிறது
உடலின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
தைராய்டு சுரப்பியின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது
நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது
இளமையான தோற்றத்தைத் தருகிறது
உடலுக்கு ஆற்றலைத் தருகிறது
வயிற்று உள்ளுறுப்புகளைப் பலப்படுத்துகிறது
சீரண மண்டல செயல்பாடுகளை மேம்படுத்துகிறது
வயிற்றுத் தசைகளைப் பலப்படுத்துகிறது
தொப்பையைக் கரைக்கிறது
இடுப்பின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
இடுப்பு மற்றும் தொடையில் உள்ள அதிக சதையைக் கரைக்கிறது
குழந்தையின்மை குறைப்பாட்டை நீக்குகிறது
கால்களை பலப்படுத்துகிறது
மாதவிடாய் காலத்து வலிகளைப் போக்க உதவுகிறது
கவனத்தைக் கூர்மையாக்குகிறது
மன அழுத்தத்தைப் போக்குகிறது



**செய்முறை:-**

விரிப்பில் கால்களை நீட்டிப் படுக்கவும். கைகள் உடலின் பக்கவாட்டில் இருக்க வேண்டும்.
மூச்சை வெளியேற்றியவாறு ஹலாசன நிலைக்கு வரவும்.
தலைக்குப் பின்னால் கைகளைக் கொண்டு சென்று பாதங்களைப் பிடிக்கவும். மாறாக, கால் பெருவிரலையும் பிடிக்கலாம்.
கால்களைப் பக்கவாட்டில் கொண்டு செல்லவும்.
20 முதல் 30 வினாடிகள் இந்நிலையில் இருக்கவும்.
ஆசன நிலையிலிருந்து வெளியில் வர, கால்களை விடுவித்து, ஹலாசன நிலைக்கு வரவும். பின் கால்களை உயர்த்தி முன்னால் கொண்டு வந்து தரையில் நீட்டி ஆரம்ப நிலைக்கு வரவும்.

# கிவி பழம் நன்மைகள்

1. செரிமானத்தை ஊக்குவிக்கிறது. கிவி பழத்தில் உள்ள ஆக்டினிடின் எனும் என்சைம் செரிமானத்திற்கு பெரிதும் உதவுகிறது. மலச்சிக்கலைத் தடுப்பதற்கும் உடலை சீராக வைத்திருப்பதற்கும் நார்ச்சத்து அவசியம் ஆகும். பச்சை கிவி பழத்தில் குறிப்பாக ஆக்டினிடின் எனப்படும் இயற்கை செரிமான நொதி உள்ளது. இது புரதத்தை உடைத்து இரைப்பை மற்றும் குடல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

2. இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். கிவி பழத்தில் நிறைய பொட்டாசியம் ஊட்டச்சத்துக்கள் காணப்படுவதால் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

3. நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டும் கிவி பழங்களில் உள்ள ஆன்டி ஆக்சிடென்ட்டுகள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகின்றன. ஒரு கப் கிவி பழ சாறில் 273 சதவிகிதம் வைட்டமின் சி சத்து நிறைந்து காணப்படுகிறது. இந்த வைட்டமின் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பெரிதும் உதவுகிறது.

4. கிவி பழம் இரத்த அழுத்த அளவுகளை குறைத்து, அவற்றை கட்டுப்பாட்டில் வைக்க உதவுகிறது.

5. நல்ல உறக்கத்தைக் கொடுக்கும். உறங்குவதற்கு முன் கிவி பழத்தை உண்டால், அது நல்ல உறக்கத்தை அளிக்கும். மற்றும் உறக்கத்தின் தரத்தை அதிகரிக்கும்.

6. கர்ப்பிணிகளின் வயிற்றில் வளரும் குழந்தையின் மூளை மற்றும் அறிவாற்றல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. கிவி பழத்தில் போலேட் எனும் போலிக் அமிலம் அதிகம் காணப்படுவதால் கற்பிணிகளுக்கு பலன் அளிக்கக் கூடியதாகவுள்ளது.

7. ஆஸ்துமா நோயைக் குணப்படுத்தும். கிவி பழத்தில் இருக்கும் அதிக அளவு வைட்டமின் சி, ஆஸ்துமா நோய்க்கு சிகிச்சை அளிக்க உதவுகின்றது. கிவி பழங்கள் சுவாச குழாய் அதாவது மூச்சுக்குழாய் தொடர்பான பிரச்சனைகள் ஏதும் ஏற்படாமல் தடுத்து, அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்த உதவுகின்றன.

8. வயிற்றில் ஏற்படும் அல்சர் குறைபாட்டைச் சரி செய்ய உதவுகின்றன. கிவி பழத்தில் காணப்படும் அதிகப்படியான வைட்டமின் சி சத்துக்கள் வயிற்றில் ஏற்படும் அல்சர் குறைபாட்டை சரி செய்ய உதவுகின்றன.

9. வைட்டமின் சி சத்து, புண்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது. வாய் புற்றுநோய் செல்களை எதிர்த்து போராடும் தன்மை கொண்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது. கிவி பழத்தில் இருக்கும் வைட்டமின் சி சத்து, உடலில் புற்றுநோய் உருவாக காரணமாக இருக்கும் தேவையற்ற செல்களை எதிர்த்து போராட உதவுவதோடு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை குறைக்கிறது.

10. கண்களில் உள்ள செல்கள் மற்றும் திசுக்களை ஆரோக்கியமாக வைத்து, கண்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. அதாவது கிவி பழங்களில் இருக்கும் வைட்டமின் சி, ஒரு சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்சிடென்ட் என்பதால் கண்பார்வையை சீராக்கும்.

11. பக்கவாதம், மாரடைப்பு, இதர சரும பிரச்சனைகளை தடுக்க உதவுகிறது. சருமத்தில் ஏற்படும் கறைகள், பருக்கள், தழும்புகள் போன்றவற்றை போக்க கிவி பழத்தில் உள்ள ஆன்டி ஆக்சிடென்ட்டுகள் மற்றும் ஆன்டி மைக்ரோபையல் பண்புகள் பெரிதும் உதவுகின்றன. கிவியில் உள்ள வைட்டமின் சி, கொலாஜன் உற்பத்திக்கு மிகவும் அவசியமான ஒன்று ஆகும். இது திசுக்களை இணைத்து, சருமத்தை பலமாக வைக்க உதவுகிறது.

12. முடி உதிர்வு, பொடுகு, உச்சந்தலையில் ஈரப்பதம் இல்லாமை போன்ற பிரச்சனைகளை தடுக்கிறது. கிவி பழத்தில் இருக்கும் வைட்டமின் ஏ மற்றும் சி, ஆன்டி ஆக்சிடென்ட்டுகள் போன்றவை கூந்தலில் ஏற்படும் இப்பிரச்சனைகளை போக்கி, தலைமுடியின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றன.

# Entertainment Corner

## அறுசுவை சமையல்

# ஆந்திரா ஸ்டைல் கோவக்காய் பொரியல்

**தேவையான பொருட்கள்:-**

3 tsp எண்ணெய்
1 tsp கடுகு
1 tsp உளுந்தம் பருப்பு
10 வர மிளகாய்
கருவேப்பிலை தேவையான அளவு
1 கப் பூண்டு இடித்து எடுத்தது
5 பச்சை மிளகாய் நறுக்கி இடித்து
4 பெரிய வெங்காயம் நறுக்கி எடுத்தது
1 tsp மஞ்சள் தூள்
500 கிராம் கோவக்காய்
உப்பு தேவையான அளவு
4 தக்காளி நறுக்கி எடுத்தது
தண்ணீர் தேவையான அளவு

**அரைப்பதற்கு**

1/2 tsp முழு தனியா
10 வரமிளகாய்
குருவேப்பிலை தேவையான அளவு
1/2 கப் எள்ளு
1/2 கப் வறுத்த வேர்கடலை
2 tsp சீரகம்

**செய்முறை:-**

முதலில் கடாயில் எண்ணெய் சேர்த்து, எண்ணெய் சூடானதும், கடுகு, உளுந்தம் பருப்பு, வர மிளகாய், கருவேப்பிலை சேர்த்து எண்ணெயில் பொரிய விடவும்.

அதோடு இடித்து வைத்த பூண்டு பொரிய பின் பச்சை மிளகாய் வெங்காயம் சேர்த்து கலந்து விடவும். மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக கலந்துகொள்ளவும். வெங்காயம் நன்றாக வதங்கிய பின், நறுக்கி எடுத்த கோவக்காய் சேர்க்கவும்.

பின் உப்பு சேர்த்து கிளறி விட்டு, அதோடு நறுக்கி வைத்த தக்காளி சேர்த்து, காய் வேகும் அளவிற்கு மட்டும் தண்ணீர் சேர்த்து நன்றாக கலந்து விட்டு மூடி வைக்கவும். இப்போது மற்றொரு கடாயில், முழு தனியா, வர மிளகாய், கருவேப்பிலை, எள்ளு சேர்த்து நிறம் மாறும் வரை நன்றாக வறுக்கவும். ஆதோடு வறுத்த வேர்க்கடலை சேர்க்கவும்.

வறுத்த வேர்க்கடலை அதிகமாக சேர்த்தால் சுவையும் அதிகமாக இருக்கும், பின் சீரகம் சேர்த்து அனைத்தையும் நன்றாக வறுத்து எடுத்து கடாயை இறக்கவும்.

வறுத்து எடுத்ததை, கொரகொரப்பாக அரைத்து எடுக்கவும். இப்போது முடி வேக வைத்த கோவக்காய் நன்கு வெந்திருக்கும். அதில் அரைத்து வைத்த பொடியை சேர்த்து, உப்பு தேவைப்பட்டால் சிறிது சேர்த்து கலந்து விட்டு, கடாயை இறக்கினால், சுவையான ஆந்திரா ஸ்டைல் கோவக்காய் பொரியல் தயார்.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 6 | 5 | 1 | 3 | 2 | 4 | 8 |
| 1 | 5 | 8 | 6 | 4 | 2 | 7 | 9 | 3 |
| 2 | 3 | 4 | 7 | 9 | 8 | 5 | 1 | 6 |
| 7 | 6 | 1 | 8 | 3 | 5 | 9 | 2 | 4 |
| 8 | 2 | 3 | 4 | 7 | 9 | 1 | 6 | 5 |
| 5 | 4 | 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 7 |
| 6 | 9 | 7 | 3 | 5 | 1 | 4 | 8 | 2 |
| 3 | 1 | 5 | 2 | 8 | 4 | 6 | 7 | 9 |
| 4 | 8 | 2 | 9 | 6 | 7 | 3 | 5 | 1 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 6 | | | 3 | | 9 | |
| | 4 | | | 1 | | | 6 | 8 |
| 2 | | | 8 | 7 | | | | 5 |
| 1 | | 8 | | | 5 | | 2 | |
| | 3 | | 1 | | | | 5 | |
| 7 | | 5 | | 3 | | 9 | | |
| | 2 | 1 | | | 7 | | 4 | |
| 6 | | | | 2 | | 8 | | |
| | 8 | 7 | 6 | | 4 | | | 3 |

## விடுகதை விளையாட்டு

1. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் -அவன் யார்?
2. எண்ணெய் வேண்டா விளக்கு எடுப்பான் கை விளக்கு -அது என்ன?
3. வித்தில்லாமல் விளையும் வெட்டாமல் சாயும் -அது என்ன?
4. அம்மா பின்னிய நூலை அவிழ்த்தால் போச்சு -அது என்ன?
5. மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும் -அது என்ன?
6. அந்திவரும் நேரம் அவளும் வரும் நேரும் -அது என்ன?
7. மண்ணுக்குள் இருக்கும் மங்கைக்கு அழகு தரும் -அது என்ன?
8. இரவும் பகலும் ஓய்வு இல்லை படுத்தால் எழுப்ப ஆள் இல்லை -அது என்ன?


Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

| | | |
|---|---|---|
| சிலை | | கலை |
| | லை | |
| எல்லை | | தலைவி |

ஓர் எழுத்து நான்கு சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## சென்ற வார குறுக்கெழுத்து விளையாட்டு விடைகள்

**இடமிருந்து வலம்:**
1. மயில் வாகனம்
4. அலைவரிசை
6. அறிவு
7. அணி
9. கைகழுவுதல்
11. சிம்பு
13. விலை
14. தும்பி

**மேலிருந்து கீழ்:**
1. மலைகளின் அரசி
2. வானிலை அறிக்கை
3. கத்தரிகோல்
5. சைவம்
8. ஏழுத்து
10. தம்பி
12. புவி

## சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1. நெருப்பு
2. சேவல்
3. சோளக்கதிர்
4. உப்பு
5. உளுந்து

TNBIL04133 R.Dis.No.1845/2014




# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி






**Joshua Daniel**
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.



DOT TO DOT DRAWING

## படத்தில் உள்ள 11 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



## PAPER CRAFT



## MEHENDI









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH